Since-2000
Dr.HARIHARAN'S தென்றல் IAS அகாடமி
An ISO 9001-2015 CERTIFIED INSTITUTION
5000 க்கும் மேற்பட்ட வெற்றியாளர்கள்

# தென்றலின் குறளின் குரல்

## தினம் ஒரு திருக்குறள் அதிகாரம்(60)

## ஊக்கமுடைமை

குறள்:591

**உடைய ரெனப்படுவது ஊக்கம் அஃதில்லார்**
**உடையது உடையரோ மற்று.**

குறள் விளக்கம்:

ஊக்கம் உடையவரே எல்லாவற்றையும் உடையவர்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதை உடையவர் என்றாலும் உடையவர் ஆக மாட்டார்.

**குறள்:592**

**உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை**
**நில்லாது நீங்கி விடும்.**

குறள் விளக்கம்:

மன ஊறுதியே நிலையான உடைமையாகும், மற்றப் பொருளுடைமையானது நிலைத்திராமல் நீங்கிவிடுவதாகும்.

**குறள்:593**

**ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்**
**ஒருவந்தம் கைத்துடை யார்.**

குறள் விளக்கம்:

ஊக்கத்தை உறுதியாகத் தம் கைப்பொருளாக உடையவர், செல்வத்தை இழந்து விட்டக்காலத்திலும், இழந்து விட்டோமோ என்று மனம் கலங்க மாட்டார்.

**குறள்:594**

**ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா**
**ஊக்க முடையா னுழை.**

குறள் விளக்கம்:

சோர்வு இல்லாத ஊக்கம் உடையவனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிக் கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

**குறள்:595**

**வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத் தனையது உயர்வு.**

குறள் விளக்கம்:

நீர்ப்பூக்களின் தண்டின் நீளம் அது நிற்கும் நீரின் அளவாகும், அதுபோல மனிதரின் வாழ்க்கையின் உயர்வு அவர் மனத்தில் கொண்டுள்ள ஊக்கத்தின் அளவே இருக்கும்.

**குறள்:596**

**உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது**
**தள்ளினும் தள்ளாமை நீர்த்து.**

குறள் விளக்கம்:

எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ் வுயர்வுக் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.

**குறள்:597**

**சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்**
**பட்டுப்பா டூன்றுங் களிறு.**

குறள் விளக்கம்:

உடல் முழுதும் அம்புகளால் துளைக்கப்பட்டாலும் யானை உறுதி தளராமல் தன் பெருமையை நிலை நிறுத்தும், அதுபோல ஊக்கம் உடையவர் தமக்கு அழிவு வந்த போதும் ஊக்கம் இழக்கமால் தம் பெருமையை நிலைநிறுத்துவர்.

**குறள்:598**

**உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து**
**வள்ளியம் என்னும் செருக்கு.**

குறள் விளக்கம்:

ஊக்கம் இல்லாதவர் பிறர்க்கு உதவும் வள்ளல் யாம் என்னும் மன உயர்வைப் பெறமாட்டார்.

**குறள்:599**

**பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை**
**வெரூஉம் புலிதாக் குறின்.**

குறள் விளக்கம்:

யானை பெரிய உடம்பையும், கூர்மையான கொம்புகளையும் உடையதானாலும், புலி தாக்குமானால் அச்சப்படும்.

**குறள்:600**

**உரமொருவற்கு உள்ள வெறுக்கைஅஃ தில்லார்**
**மரம்மக்க ளாதலே வேறு.**

குறள் விளக்கம்:

ஒருவனுக்கு ஊக்கமிகுதியே உறுதியான வலிமையாகும், அஃது இல்லாதவர் மரத்துக்குச் சமமாவர், இவர்கள் மக்கள் உருவில் இருப்பதே வேறுபாடு.